UNIVERSITY OF PERADENIYA
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 300 මට්ටම - 2023
இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்)
300 வது தேர்ச்சி மட்டம் 2023

Bachelor of Arts (External-New Syllabus) Examination 300 Level - 2023

# ECNE 302 – அபிவிருத்தி பொருளியல் (Development Economics)

**அறிவுறுத்தல்கள்:**

i. இவ்வினாத்தாளில் 07 வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏதாவது ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ii. ஒதுக்கப்பட்ட நேரம்: மூன்று (03) மணித்தியாலயம் மட்டும் .
iii. ஒதுக்கப்பட்ட புள்ளிகள்: அறுபது (60) புள்ளிகள் மட்டும்

---

1. a) அபிவிருத்திக் கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளின் பரிணாமத்தை விளக்குக. 12 புள்ளிகள்

   b) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் முக்கிய அபிவிருத்திப் பிரச்சினைகள் யாவை? உமது விடையை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிகள்

2. 'அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் முக்கியம்'. இலங்கையிலிருந்தா அனுபவங்களை கொண்டு இக்கூற்றை விவரிக்குக. 20 புள்ளிகள்

3 a) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகர்ப்புற ஊழியச் சந்தை மற்றும் கிராமப்புற ஊழியச் சந்தையின் அடிப்படை பண்புகளை வேறுபடுத்துக. 18 புள்ளிகள்

   b) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள பல்வேறு வகையான வேலையின்மையை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிகள்

4. a) சமத்துவமின்மை, வறுமை மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை சுருக்கமாக விவரிக்குக. 08 புள்ளிகள்

   b) வருமான சமத்துவமின்மையின் வேறுபட்ட அளவீடுகளை விளக்குக. 06 புள்ளிகள்

   c) வறுமையை ஒழிப்பதற்கு இலங்கை அரசாங்கங்களால் எவ்வகையான கொள்கைத் தெரிவுகளை மேற்கொள்ள முடியும். உங்கள் விடையை சுருக்கமாக விளக்குக. 06 புள்ளிகள்

5. a) சனத்தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையே உள்ள தொடர்பை, அபிவிருத்திப் பொருளாதார வல்லுநர்கள் வெளிப்படுத்திய பல்வேறு கருத்துக்களைக் கருத்தில் கொண்டு தெளிவாக விளக்குக. 12 புள்ளிகள்

   b) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை விரைவுபடுத்துவதில் கல்வி மற்றும் சுகாதாரத்தின் பங்கை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிகள்

6. a) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயம் ஏன் ஒரு முக்கிய துறையாக கருதப்படுகிறது. உங்கள் விடையை சுருக்கமாக விளக்குக. 08 புள்ளிகள்

   b) கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை விவரிக்குக. 06 புள்ளிகள்

   c) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு அரசாங்கங்களால் ஒருங்கிணைக்கப்படும் கொள்கை நடவடிக்கைகளை விளக்குக. 06 Marks

7. பின்வருவனவற்றில் **இரண்டு** விடயங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்கிடையேயான தொடர்பை தெளிவாக விளக்குக.

   a) சேமிப்பு, முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சி

   b) நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் கிராமப்புற அபிவிருத்தி

   c) சனத்தொகை வளர்ச்சி, வறுமை மற்றும் அபிவிருத்தி

   d) கல்வி மற்றும் திறன் சாதனைகள் மற்றும், ஊழியர்களுக்கான கேள்வி

   e) சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்தி

(ஒவ்வொன்றிற்கும் 10 புள்ளிகள்)

XXXXXXXX